**(வலைப்பின்னல் மாற்றுமுறை)**

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

## 1999ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்க, ரணவிரு சேவா அதிகார சபைச் சட்டம்

---

*(1999 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 23 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.)*

*அரசினர் ஆணைப்படி ஆச்சிடப்பட்டது.*

---

*1999 திசெம்பா மாதம் 24 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக்** குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

---

*கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.*

**விலை : ரூபா 11.50** **தபாற் செலவு : ரூபா 5.25**

**1999 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்க, ரணவிரு சேவா அதிகாரசபைச் சட்டம்** 1

[*1999 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 23 ஆந் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.*]

*ச.வ.— ஒ. 4/99*

**ஆயுதந்தாங்கிய படைகளின் மற்றும் பொலிசுப் படையின் ஊனமுற்ற உறுப்பினர்களின் அத்துடன் நடவடிக்கையின் போது கொல்லப்பட்ட அல்லது காணாமற்போன ஆயுதந் தாங்கிய படைகள் மற்றும் பொலிசுப்படை உறுப்பினர் களில் தங்கிவாழுநர்களின் நலனை மேம்படுத்துவதற்கென ஓர் அதிகாரசபையைத் தாபிப்பதற்கும் அத்துடன் அத னுடன் தொடர்புடைய அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளு மன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

*சுருக்கப் பெயர்.*

1. இச்சட்டம், 1999 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்க, ரணவிரு சேவா அதிகாரசபைச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

*ரணவிரு சேவா அதிகாரசபையைத் தாபித்தல்.*

2. (1) ரணவிரு சேவா அதிகாரசபை என அழைக்கப் படுவதான அதிகாரசபையொன்று தாபிக்கப்படுதல் வேண்டும். (இது இதனகத்துப் பின்னர் "அதிசாரசபை"எனக் குறிப்பீடு செய்யப்படும்).

(2) அதிகாரசபையானது (1) ஆம் உட்பிரிவினால் அதற்குக் குறித்தொதுக்கப்பட்ட பெயரின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாதல் வேண்டும் என்பதுடன் இடையறாவழியுரிமை யையும் பொது இலச்சினையொன்றையும் கொண்டிருத்தலும் வேண்டும் ; அத்துடன் அத்தகைய பெயர் கொண்டு அது வழக்குத் தொடுக்கலாம் என்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம்.

*அதிகாரசபையின் அலுவல்களின் நிர்வாகம் முகாமைச் சபைக்கு உரித்தாக்கப்பட்டுள்ளது.*

3. (1) அதிகாரசபையினது அலுவல்களின் நிர்வாகமும் முகாமையும் சனாதிபதியால் நியமிக்கப்பட்ட பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டதான முகாமைச்சபைக்கு (இதனகத் துப்பின்னர் "சபை" என்று குறிப்பீடு செய்யப்படும்) உரித் தாக்கப்படுதல் வேண்டும் :—

H-022545

(அ) பாதுபாப்பு எனும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அத்தகைய செயலாளரால் நியமிக்கப்படும் அந்த அமைச்சின் பிரதிநிதி ;

(ஆ) உள்நாட்டு அலுவல்கள் எனும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அத்தகைய செயலாளரால் பெயர்குறித்து நியமிக்கப்படும் அந்த அமைச்சின் பிரதிநிதி ;

(இ) இலங்கைத் தரைப்படை (நலன்பேணல்) பணிப் பாளர் ;

(ஈ) இலங்கைத் கடற்படை (நலன்பேணல்) பணிப் பாளர் ;

(உ) இலங்கைத் வான்படை (நலன்பேணல்) பணிப் பாளர் ;

(ஊ) நலன்பேணல் என்பதற்குப் பொறுப்பான பிரதிப் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி ;

(எ) பாதுகாப்பு எனும் விடயத்திற்குப் கபாறுப்பான அமைச்சரினது அமைச்சின் சேவா வனிதா பிரிவின் தலைவர் ;

(ஏ) பாதுகாப்பு எனும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரினது அமைச்சின் பிரதம கணக்காளர் ;

(ஐ) நிதி எனும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்ச ரால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட பொதுத் திறைசேரியின் பிரதிநிதியொருவர் ;

(ஒ) சனாதிபதியினால் நியமிக்கப்படும் வேறு மூன்று உறுப்பினர்கள், அவர்களில் ஆகக் குறைந்தது இரு உறுப்பினர்கள் மருத்துவ சட்டத்தொழில்

உறுப்பினர்களாகவிருத்தல் வேண்டும்; இப்பந்தியின் கீழ் நியமிக்கப்படும் உறுப்பினர் ஒருவர் இதனகத்துப் பின்னர் "நியமிக்கப்பட்ட உறுப்பினர்" ஒருவர் எனக் குறிப்பீடு செய்யப்படும்.

(2) சனாதிபதி, சபையின் உறுப்பினர்களிடையேயிருந்து சபையின் தவிசாளர் மற்றும் உப தவிசாளர் ஒருவரை நியமித்தல் வேண்டும்.

(3) இந்தச் சட்டத்திற்கான அட்டவணையின் ஏற்பாடுகள் சபையின் நியமிக்கப்பட்ட உறுப்பினர்களின் பதவிக் காலம் சபையின் உறுப்பினர்களுக்கு செலுத்தப்படற்பாலதான ஊதியம் மற்றும் சபையின் கூட்டங்கள், இலச்சினை தொடர்பில் பயனுறுவதாதல் வேண்டும்.

*அதிகார சபையின் பணிகள்.*

**4.** அதிகாரசபையின் பணிகள் பின்வருவனவாதல் வேண்டும்.

(அ) நடவடிக்கையின் போது ஊனமுற்றுள்ள ஆயுதந் தாங்கிய படைகள் மற்றும் பொலிசுப் படை உறுப்பினர்களின் பிற் பராமரிப்புக்கும் புனர் வாழ்வுக்கும் ஏற்பாடு செய்தல் ;

(ஆ) பின்வருவோருக்கு, அதாவது —

(i) நடவடிக்கையின் போது ஊனமுற்றுள்ள ஆயுதந் தாங்கிய படைகள் அத்துடன் பொலிசுப் படை உறுப்பினர்களுக்கு, அத்துடன்

(ii) நடவடிக்கையின் போது கொல்லப்பட்ட அல்லது காணாமற் போன ஆயுதந்தாங்கிய படைகள் மற்றும் பொலிசுப் படை உறுப்பினர்களில் தங்கி வாழுநர்களுக்கு வாழிடம் வழங்குதல் அல்லது வழங்குவதில் உதவியளித்தல் ;

(இ) பின்வருவோருக்கு, அதாவது —

(i) நடவடிக்கையின் போது ஊனமுற்றுள்ள ஆயுதந்தாங்கிய படைகள் அத்துடன் பொலிசுப் படை உறுப்பினர்களுக்கு ; அத்துடன் ,

(ii) நடவடிக்கையின் போது கொல்லப்பட்ட அல்லது காணாமற் போன ஆயுதந்தாங்கிய படைகள் மற்றும் பொலிசுப் படை உறுப் பினர்களில் தங்கி வாழுநர்களுக்கு,மருத்துவக் கவனிப்பளித்தல் அல்லது மருத்துவக் கவனிபப் பெறுவதற்கு உதவியளித்தல்.

(ஈ) புலமைப் பரிசில்கள் வழங்குவதன் மூலமும் வேறு வகையான உதவி மூலமும் —

(i) நடவடிக்கையின் போது ஊனமுற்றுள்ள ஆயுதந் தாங்கிய படைகள் அத்துடன் பொலிசுப் படை உறுப்பினர்கள் ; அத்துடன்

(ii) நடவடிக்கையின் போது கொல்லப்பட்ட அல்லது காணமற் போன ஆயுதந் தாங்கிய படைகள் அத்துடன் பொலிசுப் படை உறுப்பினர்களில் தங்கிவாழுநர்கள், கல்வி மற்றும் உயர் கல்வி பெற்றுக் கொள்ள இயலச் செய்தல் ;

(உ) ஊதியம் கொண்ட தொழிலைப் பெற்றுக் கொள்வ தற்கு —

(i) நடவடிக்கையின் போது ஊனமுற்றுள்ள ஆயுதந் தாங்கிய படைகள் மற்றும் பொலிசுப் படை உறுப்பினர்களுக்கு, அத்துடன்

(ii) நடவடிக்கையின் போது கொல்லப்பட்ட அல்லது காணாமற் போன ஆயுதந் தாங்கிய படைகள் அத்துடன் பொலிசுப் படை உறுப்பினர்களில் தங்கி வாழுநர்களுக்கு உதவுதல், அத்துடன்

(ஊ) நடவடிக்கையின் போது ஊனமுற்றுள்ள ஆயுதந் தாங்கிய படைகள் மற்றும் பொலிசுப் படை உறுப்பினர் களுக்கு தொழில் வழங்கும் நோக்குடன் கைத்தொழில், கமத் தொழில் அல்லது வர்த்தகத் தொழில் முயற்சிகளை அமைத்தல் ; அத்துடன்

(எ) அதிகார சபையின் பணிகளை நிறைவேற்றுவதற்கு அவசியமாகக் கூடியவாறான அல்லது உசிதமாக் கூடியவாறான அத்தகைய வேறு எல்லாச் செயல்களையும் விடயங்களையும் செய்தல்.

சபையின் தத்துவங்கள்.

**5.** *(1)* சபையானது, அதனது பணிகளை நிறைவேற்றும் நோக்கங்களுக்காக பின்வரும் தத்துவங்களைக் கொண்டிருத்தல் வேண்டும் —

(அ) ஏதேனும் அசையும் அல்லது அசையா ஆதனத்தை கைக்கொள்ளுதலும் வைத்திருத்தலும் அத்துடன் அதனை விற்றல் , குத்தகைக்கு விடுதல் , ஈடுவைத்தல், கொடுத்து மாற்றல் அல்லது வேறுவகையில் கையுதிர்த்தல் ;

(ஆ) அதனது பணிகளை நிறைவேற்றுவதற்கு அவசியமாகக் கூடியவாறான அத்தகைய எல்லா ஒப்பந்தங்களையும் செய்து கொள்ளல் ;

(இ) ஏதேனும் வங்கியில் அல்லது வங்கிகளில் நடைமுறை சேமிப்பு அல்லது வைப்புக் கணக்குகளை ஆரம்பித்தல் செயற்படுத்தல் அத்துடன் பேணுதலும் ;

(ஈ) அதனது பணிகளை நிறைவேற்றுவதற்கு அவசியமாகக் கூடியவாறான அத்தகைய அலுவலர்களையும் சேவையாளர்களையும் வேலைக்கமர்த்துதல், அத்துடன் அத்தகைய அலுவலர்கள் சேவையாளர்கள் மீது ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டைப் பிரயோகித்தல் ;

(உ) (ஈ) பந்தியின் கீழ் நியமிக்கப்பட்ட அலுவலர்களதும் சேவையாளர்களதும் சேவை நியதிகளையும் நிபந்தனைகளையும் தீர்மானித்தல் ; அத்துடன்

(ஊ) அதனது பணிகளை நிறைவேற்றுவதற்கு அவசியமான அல்லது இடைநேர்விளைவான அத்தகைய எல்லா வேறு செயல்கள் அல்லது விடயங்களைச் செய்தல்.

பதிவேடுகள்.

**6.** அதிகாரசபையானது, இச்சட்டம் தொடங்கியதிலிருந்து அறுபது நாட்களுக்குள் முறையே பின்வரும் பதிவேடுகளைத் தயாரிக்கச் செய்வித்தல் வேண்டும்.

(அ) நடவடிக்கையின்போது ஊனமுற்றுள்ள ஆயுதந் தாங்கிய படைகளதும் பொலிசுப் படையினதும் எல்லா உறுப்பினர்களும் ; அத்துடன்

(ஆ) நடவடிக்கையின்போது கொல்லப்பட்ட அல்லது காணாமற்போன ஆயுதந்தாங்கிய படைகள் மற்றும் பொலிசுப் படை உறுப்பினர்களின் தங்கிவாழுநர்கள்.

அத்துடன், அத்தகைய பதிவேடுகள் மீள்பார்வையிடப்பட்ட அல்லது திருத்தப்படவேண்டிய அவசியமேற்படும்போது அப்படிச் செய்வித்தலும் வேண்டும்.

அதிகாரசபையின் பணியாட்டொகுதி.

**7.** (1) சபையின் வேண்டுகோளின்பேரில், பகிரங்க சேவையில் உள்ள அலுவலர் ஒருவர் அவ்வலுவலரினதும், பொது நிர்வாகம் என்ற விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுக்கான செயலாளரினதும் சம்மதத்துடன் சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்கு அதிகாரசபைக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படலாம் அல்லது அதேபோன்ற சம்மதத்துடன் அத்தகைய பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(2) அதிகாரசபையின் பணியாட்டொகுதிக்கு பகிரங்க சேவையில் உள்ள அலுவலர் எவரும் தற்காலிகமாக நியமிக்கப்படுமிடத்து, 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க

தெசிய பொக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் எற்பாடுகள் ஏற்றமாற்றங்களுடன் அவருக்கும், அவர் தொடர்பிலும் ஏற்புடையதாதல் வேண்டும்.

(3) அதிகாரசபையின் பணியாட்டொகுதிக்கு பகிரங்க சேவையில் உள்ள அலுவலர் எவரும் நிரந்தரமாக நியமிக்கப்படுகின்றவிடத்து, 1991 ஆம் ஆண்டின் 37 அம் இலக்க,தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் 3 ஆம் உம்பிரிவின் ஏற்பாடுகள் ஏற்றமாற்றங்களுடன் அவருக்கும் அவர் தொடர்பிலும் ஏற்புடையதாதல் வேண்டும்.

(4) குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியொன்றிற்கு அரசாங்கத் திற்குச் சேவை செய்வதாக உடன்பட்டுக்கொண்டவரான எவரேனும் ஆளை அதிகாரசபை ஊழியத்திலமர்த்துமிடத்து, அந்த ஆளினால் அதிகாரசபைக்கு ஆற்றப்படும் சேவைக்காலம் எதுவும், அத்தகைய உடன்படிக்கையின் கடப்பாடுகளை நிறைவேற்றும் நோக்கததிற்காக அரசாங்கத்திற்கு ஆற்றப்பட்ட சேவையாகக் கருதப்படுதல் வேண்டும்.

**8.** (1) அதிகாரசபை அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். (இது இதனகத்துப்பின்னர் "நிதியம்" என்று குறிப்பீடுசெய்யப்படும்). அதிகாரசபையின் நிதியம்.

(2) பின்வருவன நிதியத்துக்குச் செலுத்தப்படல் வேண்டும் :—

(அ) அதிகாரசபையின் நோக்கங்களுக்காக காலத்துக்குக் காலம் பாராளுமன்றத்தினால் ஒதுக்கப்படக் கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகை களும் ;

(ஆ) 4 ஆம் பிரிவின் (ஊ) எனும் பந்தியினால் அதிகார சபைக்கு ஒதுக்கப்பட்ட பணிகளை நிறைவேற்று வதில் நிறுவப்பட்ட தொழில்முயற்சிகளிலிருந்தான இலாபங்கள் என்ற வகையில் அதிகாரசபையால் பெறப்படக்கூடியதான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் ; அத்துடன்

(இ) உள்நாட்டு அல்லது வெளிநாட்டு மூலங்களிலிருந்து கொடைகள், மானியக்கொடைகள் அல்லது நன்கொடைகளாகப் பெற்றுக்கொள்ளப்பட்ட எல்லாப் பணத்தொகைகளும்.

(3) அதிகாரசபையினது பணிகளை நிறைவேற்றுவதில் அதனால் உறப்படுகின்ற ஏதேனும் செலவினத்தைக் கொடுத்துதீர்ப்பதற்குத் தேவைப்படுவதான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

*நிதியாண்டும் கணக்குகளும் கணக்காய்வும்.*

**9.** (1) பஞ்சாங்க ஆண்டே அதிகாரசபையின் நிதியாண்டாதல் வேண்டும்.

(2) அதிகாரசபையின் வருமானம் மற்றும் செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள், அத்துடன் மற்ற எல்லாக் கொடுக்கல் வாங்கல்கள் பற்றிய சரியான கணக்குப் புத்தகங்களை அதிகாரசபை வைத்திருக்கச் செய்வித்தல் வேண்டும்.

(3) பகிரங்கக் கூட்டுத்தாபனங்களின் கணக்குகளின் கணக்காய்வு தொடர்பான அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகள் அதிகாரசபையின் கணக்குகளினது கணக்காய்வு தொடர்பில் ஏற்புடையனவாதல் வேண்டும்.

*குறித்த சில வரிகளிலிருந்து விலக்களிப்பு.*

**10.** (1) அதிகாரசபையினது எல்லா இலாபங்களும் வருமானங்களும், 1979 ஆம் ஆண்டின 28 ஆம் இலக்க உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் கீழான வருமானவரியிலிருந்து விலக்களிக்கப்படல் வேண்டும்.

(2) 1979 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 31 ஆம் பிரிவின் (2) உட்பிரிவின் (ஆ) எனும் பந்தியின் நோக்கங்களுக்காக, பணமாக அல்லது வேறுவகையில் அதிகாரசபைக்கு செய்யப்படும் ஒவ்வொரு கொடை, மானியக்கொடை அல்லது நன்கொடையும் அரசாங்கத்தினால் தாபிக்கப்பட்ட நிதியமொன்றுக்கு பணமாக அல்லது வேறவகையில் செய்யப்பட்ட நன்கொடை ஒன்றாகக் கருதப்படுதல் வேண்டும்.

அதிகாரசபையின் உறுப்பினர்கள், அலுவலர்கள் மற்றும் சேவையாளர்கள் பகிரங்க சேவையாளர்களாசக் கருதப்படுதல்.

**11.** சபையினது எல்லா உறுப்பினர்களும் அதிகாரசபையினது அலுவலர்களும் சேவையாளர்களும் தண்டனைச் சட்டக் கோவையின் கருத்திற்குட்படவும் அதன் நோக்கங்களுக்காகவும் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

அதிகாரசபையானது இலஞ்சச் சட்டத்தின் கருத்துக்குட்பட அட்டவணைப் படுத்தப்பட்ட நிறுவனமாதல்.

**12.** அதிகாரசபையானது இலஞ்சச் சட்டத்தின் கருத்தெல் லைக்குள் அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனமொன்றாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அச்சட்டத்தின் ஏற்பாடு கள் அதற்கிணங்கப் பொருள்கொள்ளப்படுதலும் வேண்டும்.

இச்சட்டத்தின்கீழ் அல்லது அதிகார சபையின் பணிப்பின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைக்கான பாதுகாப்பு.

**13.** (1) வழக்கு அல்லது குற்றவழக்கு எதுவும் –

(அ) இச்சட்டத்தின்கீழ் அதிகாரசபையினால் நல்லெண் ணத்துடன்செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்படும் ஏதேனும் செயலுக்காக அதிகார சபைக்கெதிராக, அல்லது

(ஆ) இச்சட்டத்தின்கீழ் அல்லது சபையின் பணிப்பின்மீது நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்படும் ஏதேனும் செயலுக்காக சபையின் எவரேனும் அலுவலருக்கு அல்லது சேவையாளருக்கு எதிராக,

தொடரப்படுதலாகாது.

(2) ஏதேனும் நீதிமன்றத்தில் அதிகாரசபையினால் அல்லது அதிகாரசபைக்கு எதிராக கொண்டுவரப்பட்ட ஏதேனும் வழக்கு அல்லது குற்றவழக்கில் அதிகாரசபையினால் உறப்பட்ட ஏதேனும் செலவு அதிகாரசபையின் நிதியத்திலிருந்து

செலுத்தப்படுதல் வேண்டும் ; அத்துடன் ஏதேனும் அத்தகைய வழக்கில் அல்லது குற்றவழக்கில் அதிகாரசபைக்குச் செலுத்தப் பட்ட அல்லது அதனால் அறவிடப்பட்ட எவையேனும் செலவுத் தொகைகள் அதிகாரசபையின் நிதியத்தில் வரவு வைக்கப்படுதலும் வேண்டும்.

(3) இச்சட்டத்தின்கீழ் அல்லது சபையின் பணிப்பின்மீது (1) ஆம் உட்பிரிவின் (ஆ) எனும் பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்ட எவரேனும் ஆளினால் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்ட தாகக் கொள்ளப்படும் ஏதேனும் செயல் தொடர்பில் அவருக் கெதிராகத் தொடரப்படும் ஏதேனும் வழக்கில் அல்லது குற்றவழக்கில் அத்தகைய ஆளினால் உறப்பட்ட ஏதேனும் செலவு, அச்செயல் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்டதென நீதிமன்றம் கொண்டால் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

*அரச ஆதனங்கள் அதிகாரசபைக்குக் கிடைக்கச் செய்தல்.*

**14.** (1) அதிகாரசபையின் ஏதேனும் நோக்கத்திற்காக அரசினது ஏதேனும் அசைவற்ற ஆதனம் தேவைப்படுத்தப் படுமிடத்து, முடிக்குரிய காணிகள் கட்டளைச் சட்டத்தின் 6 ஆம் பிரிவின்கீழ் அத்தகைய ஆதனம் எந்த நோக்கத்திற்காக ஒரு விசேட அளிப்பு அல்லது குத்தகை வழங்கப்படக்கூடுமோ அத்தகைய ஒரு நோக்கமாகக் கருதப்படல் வேண்டும் ; அத்துடன் அதற்கிணங்க, அந்தக் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகள் அதிகாரசபைக்கான அத்தகைய ஆதனத்தின் விசேட அளிப்பு அல்லது குத்தகை தொடர்பில் ஏற்புடையதாதலும் வேண்டும்.

(2) அதிகாரசபையின் ஏதேனும் நோக்கத்திற்காக அரசினது ஏதேனும் அசையும் ஆதனம் தேவைப்படுத்தப்படுமிடத்து, அத்தகைய அசையும் ஆதனத்தின் உடமையையும் பயன் பாட்டையும் அமைச்சர் கசெற்றில் வெளியிடப்படும் கடடளை மூலம் அதிகாரசபைக்கு உரித்தாக்கலாம் :

ஆயின், எவ்வாறாயினும் அத்தகைய ஆதனத்தின்மீது கட்டுப்பாட்டைக் கொண்டிருக்கும் அமைச்சரின் ஒருப்பாடின்றி இவ்வுட்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளின்கீழ் அரசினது ஏதேனும் அசைவுள்ள ஆதனத்தை பாதிக்கின்றதான கட்டளை எதுவும் அமைச்சரால் ஆக்கப்படுதலாகாது.

**15.** சபையானது, ஆணடின் போதான அதிகாரசபையின் செயற்பாடுகள் பற்றி ஓர் அறிக்கையை ஒவ்வொரு நிதியாண்டின் முடிவிலும் தயாரித்தல் வேண்டும் ; அத்துடன் அத்தகைய அறிக்கையை அமைச்சருக்கு சமர்ப்பித்தல் வேண்டும். அவர் அதனை பாராளுமன்றத்தின் முன் வைப்பிக்கச் செய்தல் வேண்டும். ஆண்டறிக்கை.

**16.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை காணப்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும். ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**17.** இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறு வகையாகத் தேவைப்படுத்தினாலன்றி — பொருள்கோடல்.

"ஆயுதந்தாங்கிய படைகள்" என்பது இலங்கை இராணுவம், இலங்கை கடற்டை அல்லது இலங்கை விமானப் படை எனப் பொருள்படும் ;

"தங்கிவாழுநர்" என்பது நடவடிக்கையின்போது கொல்லப்பட்ட அல்லது காணாமல்போன ஆயுதந்தாங்கிய படைகள் அல்லது பொலிசுப் படை தொடர்பில் அத்தகைய உறுப்பினரின் விதவை அல்லது விதுரர் தொழில் செய்யாததும் திருமணம் செய்யாததுமான மகள், தொழில்செய்யாத மகன், பெற்றோர்கள், பதினெட்டு வயதுக்கு கீழ்ப்பட்ட திருமணமாகாத சகோதரி அல்லது திருமணமாகாத சகோதரன், பாட்டன், பாட்டி என்போரை உள்ளடக்கும் என்பதுடன் பெற்றோர்கள் உயிர்வாழாதவிடத்து நடவடிக்கையில் அவர் இறந்த அல்லது காணாமல் போன நேரத்தில் அத்தகைய உறுப்பினரின் மாமாவும் மாமியும் அததகைய உறுப்பினரின் தங்கிவாழுநராக விருந்தால், அத்தகைய மாமா, மாமி, ஆகியோரையும் உள்ளடக்குவதாகும்.

"உள்ளூரதிகாரசபை" என்பது ஏதேனும் மாநகரசபை அல்லது பிரதேசசபை எனப் பொருள்படும் என்பதுடன், அத்தகைய ஏதேனும் சபையினால் அல்லது பிரதேசசபையினால் பிரயோகிக்கப்படும்,

புரியப்படும் அத்துடன் நிறைவேற்றப்படும் தத்துவங்கள் கடமைகள் அல்லது பணிகளுக்கு நேரொத்த அல்லது அவற்றைப்போன்ற தத்துவங்களை, கடமைகளை அத்துடன் பணிகளைப் பிரயோகிப்பதற்கு, புரிவதற்கு அல்லது நிறைவேற்றுவதற்கு ஏதேனும் சட்டத்தினால் அல்லது சட்டத்தின்கீழ் உருவாக்கப்படும் அல்லது தாபிக்கப்படும் ஏதேனும் அதிகாரசபையையும் உள்ளடக்கும் ;

"பொலிசுப் படை" என்பது இலங்கை பொலிசுப்படை எனப் பொருள்படும் ;

"மாகாணசபை", என்பது அரசியலமைப்பின் xvii அ என்னும் அத்தியாயத்தின்கீழ் தாபிக்கப்பட்ட ஒரு மாகாணசபை எனப் பொருள்படும்.

**அட்டவணை** (பிரிவு 3(3)]

1. ஆளொருவர், அவர்பாராளுமன்றத்தின் அல்லது மாகாணசபையின் அல்லது உள்ளூரதிகாரசபையின் உறுப்பினராகவிருந்தால் அல்லது உறுப்பினராக வந்தால் சபையின் உறுப்பினரொருவராக நியமிக்கப்படுவதற்கு அல்லது அவ்வாறு தொடர்ந்திருப்பதற்கு தகைமையற்றவராதல் வேண்டும்.

2. சபையின் நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவரின் பதவிக்காலமானது 3 ஆம் 4 ஆம் பந்திகளின் ஏற்பாடுகளுக்கமைய நான்கு ஆண்டுகளாதல் வேண்டும் :

ஆயின், இறப்பினால், பதவிதுறப்பினால் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுவதனால் பதவியை வறிதாக்கும் நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவரின் இடத்திற்கு நியமிக்கப்படும் ஆளொருவர் எந்த உறுப்பினரைத் தொடர்ந்து அவர் பதவிக்கு வருகின்றாரோ அந்த உறுப்பினரின் பதவிக்காலத்தின் முடிவுறாதெஞ்சியுள்ள காலப்பகுதிக்கு பதவிவகித்தல் வேண்டும்.

3. சபையின் நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவர் சனாதிபதிக்கு முகவரியிடப்பட்டு எழுதப்பட்ட கடிதத்தின்மூலம் தமது பதவியைத் துறக்கலாம் என்பதுடன் ; அத்தகைய பதவிதுறத்தலானது அக்கடிதம் சனாதிபதியால் எழுத்தல் ஏற்றுக்கொள்ளப்படுவதன்மீது பயனுறுதலும் வேண்டும்.

4. சனாதிபதி, கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் எடுத்துரைக்கப்படும் காரணங்களுக்காக சபையின் நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவரை பதவியிலிருந்து அகற்றலாம். இப்பந்தியின்கீழ் கட்டளையொன்று எவ்வுறுப்பினர் தொடர்பில் செய்யப்பட்டதோ, அவர் கசெற்றில் அக்கட்டளை வெளியிடப்பட்ட தேதியன்று பதவியை வறிதாக்கியதாகக் கருதப்படல் வேண்டும்.

5. சபையின் நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவர் சுகயீனம், இலங்கையி லின்மை காரணமாக அல்லது வேறு காரணத்தினால் அவரது பதவிக்குரிய கடமைகளைத் தற்காலிகமாக நிறைவேற்ற இயலாதவராக இருப்பின் அவரது இடத்தில் செயலாற்றுவதற்கென சனாதிபதிவேறு ஆளை நியமிக்கலாம்.

6. சனாதிபதியானவர் தவிசாளர், உப–தவிசாளர் பதவிகளிலிரூந்து முறையே தவிசாளரையும் உப–தவிசாளரையும் எந்நேரத்திலும் எடுத்துரைக்கப்படும் காரணங்கங்களுக்காக பதவியிலிருந்து அகற்றலாம் .

7. தவிசாளரும் உப–தவிசாளரும் சனாதிபதிக்கு முகவரியிட்டு அது தொடர்பாக எழுதப்படும் கடிதத்தின்மூலம் எந்நேரத்திலும் முறையே தவிசாளர், உப–தவிசாளர் பதவியிலிருந்து விலகலாம் ; அததகைய பதவிதுறத்தல் சனாதிபதியால் எழுத்தில் ஏற்றுக் கொள்ளபப்டுவதன்மேல் பயனுறுதலும் வேண்டும்.

8. தவிசாளரினரும் உப–தவிசானரும் பதவிக்காலமானது 6 ஆம், 7 ஆம் பந்திகளின் ஏற்பாடுகளுக்கமைய சபையின் முறையே அவர்களின் உறுப்பாண்மைக் காலப்பகுதியாதல் வேண்டும்.

9. சபையினது எல்லா உறுப்பினர்களுக்கும் அல்லது எவரேனும் உறுப்பினருக்கு நிதி எனும் விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரின் ஆலோசளையின்மீது சனாதிபதியினால் தீர்மானிக்கப்படக்கூடியதான அத்தகைய ஊதியம் செலுத்தப்படலாம்.

10. சபையின் தவிசாளர் சமுகமளித்திருந்தால் சபையின் எலலாக் கூட்டங்களுக்கும் தலைமைதாங்குதல் வேண்டும். தவிசாளர் சமுகமளிக்காத விடத்தில், உப–தவிசாளர் கூட்டங்களுக்கு தலைமைதாங்குதல் வேண்டும். ஏதேனும் அத்தகைய கூட்டத்தில்தவிசாளர் உப–தவிசாளர் ஆகிய இருவரும் சமுகமளிக்காதவிடத்து அத்தகைய கூட்டத்தில் சமுகமளித்திருக்கும் உறுப்பினர் கள், அவர்களிலிருந்து ஒருவரை அத்தகைய கூட்டத்தை தலைமைதாங்குவதற்குத் தேர்ந்தெடுத்தல் வேண்டும்.

11. சபையின் ஏதேனும் கூட்டத்திற்கான கூட்டநடப்பெண் எழு ஆக இருத்தல் வேண்டும்.

12. சபையின் ஏதேனும் கூட்டத்தில் தலைமைதாங்கும் ஆள் அவருடைய வாக்குக்கு மேலதிகமாக அறுதியிடும் வாக்கொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

13. சபையானது, 10, 11 அததடன் 12 ஆம் பந்திகளின் ஏற்பாடுகளுக்கு அமைய அதனது கூட்டங்கன் தொடர்பான அதன் நடவடிக்கை முறையையும் அத்தகைய கூட்டங்களின் போதான அலுவல்களின் கையாளுகையையும் ஒழுங்குபடுத்தலாம்.

*14.* அதிகாரசபையின் இலச்சினையானது சபையினால் தீர்மானிக்கப் படலாம் அத்துடன் அமைக்கப்படலாம் ; அத்துடன் சபையால் தீர்மானிக்கப்படக்கூடியதான அததகைய முறையில் மாற்றியமைக்கப்படலாம்.

*15.* அதிகாரசபையின் இலச்சினையானது, சபை காலத்துக்குக்காலம் தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய ஆளின் கட்டுக்காப்பில் இருத்தல் வேண்டும்.

*16.* அதிகாரசபையின் இலச்சினையானது சபையின் அனுமதியுடனும் சபையின் இரண்டு உறுப்பினர்களின் முன்னிலையிலும் தவிர சாதனம் அல்லது ஆவணம் அதிலும் பொறிக்கப்படுதலாகாது. இவர்கள் இருவரும் தாங்கள் சமுகமாயிருந்தமைக்கு அடையாளமாக அத்தகைய சாதனத்தில் அல்லது ஆவணத்தில் ஒப்பமிடுதல் வேண்டும்.

*17.* சபையின் உறுப்பினர்களிடையே வெற்றிடம் அல்லது அதன் உறுப்பினர் எவரினதும் நியமனத்தில் ஏதேனும் குறைபாடு இருப்பதன் காரணமாக மாத்திரம் சபையினது செயல் அல்லது நடவடிக்கை எதுவும் செல்லுபடியற்றதாதலாகாது.

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 ; (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல.32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ்ரோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.*